THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W.1)**

Solemnly affirmed and sworn by Tmt.Nagavalli Grade III Bench clerk on 25.3.2021. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்:105-2016

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாராம் | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா.1 ராஜாராம் முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 1ம் வாதி. நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ராமசாமி ரெட்டியாரின் வாரிசுகளை காட்டக்கூடிய கொடி வழி ஜாபிதா வா.சா.ஆ.1. 26.3.1993ம் தேதி வாதிகளும், அவரது தகப்பனாரும் எழுதி கொண்ட பாக லிஸ்ட் வா.சா.ஆ.2. எனது பெயரிலான கிஸ்தி ரசீதுகள் (எண்ணிக்கை 7) வா.சா.ஆ.3. 2ம் பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீதுகள் (எண்ணிக்கை 12) வா.சா.ஆ.4. அர்ச்சுணன், அலமேலு பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீதுகள்(எண்ணிக்கை 3) வா.சா.ஆ.5. 25.9.2013ம் தேதியிட்ட ஜெயபாண்டி, சௌந்திரபாண்டி ஆகியோர்களின் பெயரிலான தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் வா.சா.ஆ.6. 25.9.2013ம் தேதியிட்ட ஜெயபாண்டி, சௌந்திரபாண்டி பெயர்களிலான ஆவண எண்.6793/2013 தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் வா.சா.ஆ.7. 12.11.2015ம் தேதி வாதி சார்பில் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு, அஞ்சலக ரசீது மற்றும் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.8. 11.8.1937ம் தேதியிட்ட சீதாலெட்சுமியம்மாள் பெயரிலான கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.9. 13.6.1977ம் தேதியிட்ட பாண்டியம்மாள் பெயரிலான தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் வா.சா.ஆ.10. 10.10.1986ம் தேதியிட்ட தர்மராஜ் பெயரிலான கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.11. 25.2.1999ம் தேதியிட்ட தர்மராஜ் ரெட்டியாரின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.12. 25.7.1991ம் தேதியிட்ட அலமேலு பெயரிலான கிரைய பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் வா.சா.ஆ.13.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோள்படி மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)